# INDIAN IAS ACADEMY

## TNPSC CCSE Grop IV & VAO

## தேர்வு -1 - பொதுத்தமிழ்

1. துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர் யார்?
a) உடுமலை நாராயணகவி
b) இராமச்சந்திரக் கவிராயர்
c) தாராபாரதி
d) மீனாட்சி சுந்தரனார்

2.'பதுமத்தான்' என்ற சொல்லால் குறிக்கப்படுவது யார்?
a) சிவன் b) விஷ்ணு c) பிரம்மன் d) முருகன்

3. ராமச்சந்திரக் கவிராயார் எங்கு வீற்றிருக்கும் முருகனை நோக்கி விண்ணப்பம் செய்கிறார்?
a) திருப்பரங்குன்றம் b) பழனி
c) பழமுதிர்ச்சோலை d) சுவாமி மலை.

4.தனிப்பாடல் திரட்டு எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டவை?
a) நூறு முதல் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை
b) முந்நூறு முதல் நாநூறு ஆண்டுகளுக்கு
c) இருநூறு முதல் முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை.
d) இருநூறுஐம்பது முதல் முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

5. அந்தகாலம் இந்தக்காலம் எழுதியவர் யார்?
a) உடுமலை நாராயணக்கவி
b) இராமச்சந்திரக்கவிராயர்
c) நா.காமராசன்
d) ம.பொ.சி

6. பகுத்தறிவுக் கவிராயர் என உடுமலை நாராயணக்கவியை அழைத்தவர் யார்?
a) அறிஞர் அண்ணா b) மு.கருணாநிதி
c) தமிழக மக்கள் d) பெரியார்

7. குணக்கடலே! அருட்கடலே! என அழைக்கப்படும் கடவுள் யார்?
a) சிவபெருமான் b) புத்தர்
c) ஏசுபெருமான் d) முருகன்

8. உடுமலை நாராயணக்கவியின் காலம் எது?
a) 25.09.1899 முதல் 25.05.1981 வரை
b) 25.10.1899 முதல் 23.05.1981 வரை
c) 25.09.1899 முதல் 23.05.1981 வரை
d) 11.12.1892 முதல் 23.05.1981 வரை

9.ஊரும் பேரும் என்னும் நூலை எழுதியவர் யார்?
a) பண்டித கதிரேசசெட்டியார்
b) ரா.பி.சேதுப்பிள்ளை
c) பாரதிதாசன்
d) பகுத்தறிவுக் கவியராயர்

10.சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பியவர் யார்?
a) மருதகாசி b) மக்கள்கவிஞர்
c) பகுத்தறிவு கவிராயர் d) கலைஞர்

11.திருவருட்பிரகாச வள்ளலார் எங்கு பிறந்தார்? எப்போது மறைந்தார்?
a) மருதூர், 30.1.1874 b) வடலூர், 30.1.1823
c) ஸ்ரீபெரும்புதூர், 30.1.1874 d) சென்னை, 5.10.1823

12.சரியானவற்றைக் கண்டறிக.
i) அறிவுநெறிவிளங்க - சன்மார்க்க சங்கம்
ii) பசித்துயர் நீக்க - அறச்சாலை
ii) மத நல்லிணக்கம் - ஞானசபை
a) (i) மற்றும் (iii) சரி b) (ii) மற்றும் (iii) சரி
c) அனைத்தும் சரி d) (ii) மட்டும் சரி

13. பாரதிதாசன் இயற்றாத நூல் எது?
a) பாண்டியன் பரிசு b) அகல் விளக்கு
c) குடும்ப விளக்கு d) இருண்ட வீடு

14.சரியானதை கண்டறிக:
i) அளைஇ - வஞ்சம்
ii) படிறு - கலந்து
iii) அமர் - விருப்பம்
iv) துவ்வாமை - வறுமை
a) (i) & (ii) சரி b) (ii) & (iii) சரி
c) (iii) &(iv) சரி d) அனைத்தும் சரி

15. இராமலிங்க அடிகளாரின் பெற்றோர் யாவர்?
a) இராமையா - இலக்குமி அம்மாள்
b) இராமையா - சின்னம்மையார்
c) சின்னச்சாமி - சிவகாமி
d) இராமசாமி - சின்னம்மையார்



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

16.உழுவார் எல்லாம் மலைபோல் எருதை ஓட்டி பொன்னேர் பூட்டவும் இந்த பாடலடியை இயற்றியவர் யார்?
a) திரைக்கவித்திலகம் b) புரட்சிக்கவிஞர்
c) கம்பர் d) மக்கள் கவிஞர்

17. பொடி என்பதன் பொருள் யாது?
a) செடி b) சிறியது
c) மகரந்தப்பொடி d) குறைவு

18. இராமலிங்க அடிகளாரது பாடல்கள் என்ன தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளது?
a) ஜீவகாருண்ய ஒழுக்கம்
b) மனுமுறை கண்டவாசகம்
c) திருவருட்பா
d) மருட்பா

19 'சிறுமை' என்பதன் பொருள் யாது?
a) சிறியது b) துன்பம்
c) மறுமை d) இன்மை

20. எவன் கொலோ என்பதன் பொருள் யாது?
a) ஏனோ?
b) எவன் என்று சொல்வதோ?
c) எவனைக் கொல்வதோ?
d) யாரோ?

21.கனக சுப்புரத்தினத்தின் காலம் யாது?
a) 21.4.1891 முதல் 29.4.1964 b) 29.4.1892 முதல் 21.4.1965
c) 30.4.1891 முதல் 21.4.1964 d) 29.4.1891 முதல் 21.4.1964

22. முன்றுறை அரையானார் எழுதிய நூல் யாது?
a) நாலடியார் b) நான்மணிக்கடிகை
c) பழமொழி நூறூறு d) தமிழ் வேதம்

23.பொருத்துக:
a) கல்வியின் சிறப்பு - (1 )பாரதிதாசன்
b) அன்புடைமை - (2)முன்றுறை அரையனார்
c) இசையமுது - (3)மக்கள் கவிஞர்
d) செய்யும்தொழிலே தெய்வம் - (4)நாயனார்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| a) | 4 | 1 | 2 | 3 |
| b) | 2 | 4 | 1 | 3 |
| c) | 4 | 2 | 1 | 3 |
| d) | 1 | 2 | 3 | 4 |

24.'அற்று' என்பதன் பொருள் யாது?
a) பிரிந்துபோதல் b) வற்றுதல்
c) அதுபோன்றது d) தருதல்

25. முன்றுறை, அரையன் என்பது முறையே
a) ஊர்ப்பெயர், குடிப்பெயர் b) குடிப்பெயர், ஊர்ப்பெயர்
c) அரசன், குடிப்பெயர் d) குடிப்பெயர், அரசன்

26.வாடினாலும் பசி மீறினாலும் வழி மாறிடாமலே வாழ்ந்திடுவோம் என்ற பாடலடிக்கு சொந்தக்காரர் யார்?
a) தாராபாரதி b) பகுத்தறிவுக்கவிராயர்
c) மகாக்கவி d) மக்கள்கவிஞர்

27. நேரு, தன்மகள் இந்திராவுக்கு எத்தனை ஆண்டுகள் கடிதங்கள் எழுதினார்?
a) 42 ஆண்டுகள் b) 30 ஆண்டுகள்
c) 43 ஆண்டுகள் d) 41 ஆண்டுகள்

28.''தினம் வேலையுண்டு குலமானமுண்டு வருங்காலமுண்டு'' என்று பாடியவர் யார்?
a) மருதகாசி
b) பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்
c) உடுமலை நாராயணக்கவி
d) பாரதிதாசன்

29. விசுவபாரதி கல்லூரி எங்கு, யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
a) தாகூர், பேலூர்
b) கிருபாளினி, சாந்திநிகேதன்
c) தாகூர், சாந்திநிகேதன்
d) மேற்கண்ட எதுவுமில்லை

30. உழைக்கும் மக்களின் துயரங்களையும், பொதுவுடைமைச் சிந்தனைக்களையும் தம்முடைய பாடல்வழி பரவலாக்கியவர் யார்?
a) திரைக்கவித்திலகம் b) தமிழ்த் தென்றல்
c) மக்கள் கவிஞர் d) புரட்சிக்கவிஞர்

31.அல்மோராமாவட்டச் சிறைச்சாலையில் இருந்து பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கடிதத்தை எப்போது நேரு எழுதினார்?
a) 1935, பிப்ரவரி 20 b) 1936, பிப்ரவரி 21
c) 1937, பிப்ரவரி 22 d) 1935, பிப்ரவரி 22

32. தற்போதைய திருவள்ளுவராண்டு
a) 2047 b) 2049
c) 2048 d) 2046

33.'அன்பில்லாத வாழ்க்கை தளிர்க்காது' எதனைப்போல?



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

a) எலும்பு இல்லாத உயிர்களைப்போல
b) பாலை நிலத்தில் உள்ள வாடிப்போன மரம்போல
c) வெறும் தோலால் மூடப்பட்ட எலும்பு போல
d) உடம்போடு உயிர் இல்லாதது போல்

34. மக்கள் கவிஞரின் காலம் எது?
a) 13.05.1930 முதல் 8.10.1959 வரை
b) 14.04.1930 முதல் 8.10.1959 வரை
c) 13.04.1930 முதல் 8.10.1959 வரை
d) 13.04.1929 முதல் 8.10.1959 வரை

35.தவறானாதைக் கண்டறிக.
i) கும்பகோணத்தின் தென்புறம் அரிசிலாறு பாய்கிறது.
ii) ஐராதீசுவரர் கோயில் முதலாம் இராசராச சோழனால் கட்டப்பட்டது
iii) முப்புரம் எரித்தவன் கஜசம்ஹார மூர்த்தி.
iv) யானையைக்கொன்று அதன் தோலைத் தன்மீது உடுத்திக் கொண்டவர் திரி புராந்தகன்.
(a) (i), (ii) மற்றும் (iv) மட்டும் தவறு
(b) (i), (iii)மற்றும் (iv) மட்டும் தவறு
(c) (i), (ii) மற்றும் (iii) மட்டும் தவறு
(d) (ii),(iii)மற்றும் (iv) மட்டும் தவறு

36. சரியானதைக் கண்டறி:
(i) மத்தளம் - மீட்டொலி
(ii) வீணை - லய ஒலி
(iii) புல்லாங்குழல் - கானஒலி
(iv) நாகசுரம் - நல்லொலி
a)மேற்கண்ட அனைத்தும் சரியாகப் பொருந்தியுள்ளது,
(b) (i) மற்றும் (ii) சரியாகப் பொருந்தியுள்ளது,
(c) (iii) மற்றும் (iv) சரியாகப் பொருந்தியுள்ளது,
(d)மேற்கண்டஅனைத்தும் தவறாகப் பொருந்தியுள்ளது.

37.கார்ல்சேகன் எனும் வானவியல் அறிஞர் தாராசுரம் கோவிலின் கூம்பிய விமானத் தோற்றமும், அதற்குக்கீழே இருபுறமும்_______________, _______________ம் வான்வெளி ரகசியத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளன.
(a) குதிரை, காளை
(b) யானை, காளை
(c) சிங்கம், காளை
(d) குதிரை, யானை

38. நேரு எந்தப் பல்கலையில் படித்தார்.
a) ஆக்ஸ்போர்டு b) கேம்பிரிட்ஜ்
c) இம்பிரியல் d) கொலம்பியா

39.கொடுமுடி எந்த மாவட்டத்தில் உள்ளது?
a) ஈரோடு b) கரூர்
c) சேலம் d) நாமக்கல்

40.உ.வே.சா. பதிப்பிக்காத நூல்
a) சங்க நூல்கள் b) இரட்டைக்காப்பியங்கள்
c) வளையாபதி d) சீவகசிந்தாமணி

41. தாராசுரம் கோயில் யாருக்குச் சொந்தமானது?
a) மத்திய தொல்பொருள்துறை
b) தமிழகஅரசு
c) தஞ்சை அரண்மனை
d) தஞ்சை பெரிய கோவில்

42.மேரிகியூரிப் பற்றிய தவறானக் கூற்றைக் கண்டறிக.
a) போலந்து நாட்டில் 1867-ஆம் ஆண்டு பிறந்தார்.
b) ஜெர்மனியில் அறிவியல் பயின்றார்,
c) ரேடியம் எனும் தனிமத்தைக் கண்டறிந்ததற்காக 1903ம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார்.
d) ரேடியத்தின் அணு எடையை கண்டறிந்ததற்காக 1911 ஆம் ஆண்டு வேதியலுக்கான நோபல் பரிசு பெற்றார்

43. அற்புதமான ஆங்கிலப் படைப்பாளிகள் என்று நேரு யாரைக் குறிப்பிடுகிறார்?
a) சேக்ஸ்பியர், மில்டன்
b) பெர்னாட்சா, பெட்ரண்ட் ரஸ்ஸல்
c) சேக்ஸ்பியர், டால்ஸ்டாய்
d) மில்டன், பெர்னாட்சா

44.சரியானக் கூற்றைக் கண்டறிக.
a) போரும், அமைதியும் என்ற நூலை எழுதியவர் பெர்னாட்ஷா
b) காளிதாசரின் புத்தகங்கள் சுவையானவை, சிந்தனையைத் தூண்டுபவை.
c) கிரேக்க நாடகங்கள் நம் ஆர்வத்தைத் தூண்டுபவை,
d) சாகுந்தலம் உலகின் மிகச் சிறந்த நூல்களுள் ஒன்று.

45. யாருடைய எழுத்துகள் அருமையானது, அறிவார்ந்த எழுத்து.
a) பெர்னாட்சா b) பெட்ரண்ட் ரஸ்ஸல்
c) காளிதாசர் d) பிளாட்டோ

46.செயற்கை கதிர்வீச்சுப்பற்றிய வேதியியல் ஆராய்ச்சிக்கு எப்போது ஜோலியட்கியூரிக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது?
a) 1934 b) 1935 c) 1936 d) 1938

47.உ.வே.சா பற்றிய தவறானக் கூற்றைக் கண்டறிக.
a) காலம் -19.02.1855-28.04.1942
b) என்சரிதம் என்னும் தொடரை ஆனந்தகவிகடனில் எழுதினார்.
c) 1942ம் ஆண்டு டாக்டர் உ.வே.சா நூல்நிலையம் அண்ணாசாலையில் நிறுவப்பட்டது.
d) 2006ம் ஆண்டு நடுவணரசு அஞ்சல்தலை வெளியிட்டது

48.உத்தமதானபுரம் எந்த மாவட்டத்தில் உள்ளது?
a) தஞ்சாவூர் b) திருவாரூர்
c) திருவள்ளூர் d) நாகப்பட்டினம்

49. வேங்கட ரத்தினத்தைப் பாராட்டிய வெளிநாட்டு அறிஞர்கள் யாவர்?
a) கால்டுவெல், கார்ல்சேகன்
b) கார்ல்சேகன், ஜி.யு.போப்
c) ஜி.யு.போப், உ.வே.சா
d) ஜி.யூ.போப், சூலியல் வின்சோன்

50. 'தாழ' என்பதன்பொருள்
a) கீழே b) மேலே
c) குறைதல் d) கூடுதல்

51) ஒலியை உணர்த்தும்சொற்களுக்கு இலக்கணத்தில் என்னவென்று அழைக்கிறார்கள்?
a) வினைச்சொல் b) இரட்டைக்கிளவி
c) ஒருபொருட்பன்மொழி d) அளப்பெடை

52.செய்யுளில் ஓசைக்காகவும் அழுத்தத்திற்காகவும் பயன்படுத்தப்படும் சொல்?
a) ஏ b) கொல்
c) அளப்பெடை d) இரட்டைக்கிளவி

53. சடகோ எந்த நகரத்தைச் சேர்ந்தவர்?
a) ஹிரோசிமா b) நாகசாகி
c) டோக்கியோ d) நியூயார்க்

54.ஆயிரம் காகிதம் கொக்குகள் செய்தால் நோய்குணமாகும். இது எந்த நாட்டு நம்பிக்கை?
a) கொரியா b) சீனா
c) மலேசியா d) ஜப்பான்

55.எப்போது சடகோ மறைந்தார்?
a) டிசம்பர் 25, 1955 b) நவம்பர் 25, 1955
c) அக்டோபர் 25, 1955 d) ஜனவரி 25, 1955

56.பின்வருவனவற்றுள் சரியான ஒன்றைக் காண்க.
a) சடகோ இறந்தபோது 645 கொக்குகள் இருந்தன.
b) நாகசாகியில் குழந்தைகள் அமைதி நினைவாலயம் கட்டினார்கள்.
c) அரவிந்த் குப்தா, ''டென் லிட்டில் பிங்கர்ஸ்'' என்ற புத்தகத்தை எழுதினார்,
d) ஜப்பானியர் வணங்கும் பறவை மயில்

57.டேரிபாக்ஸ் புற்றுநோய் ஓட்டம் எந்த நாளில் நடத்தப்படுகிறது?
a) செப்டம்பர் 17 b) செப்டம்பர் 15
c) செப்டம்பர் 16 d) செப்டம்பர் 17

58. நாதசுர இசைக்கு ஏற்ப அடியெடுத்து ஆடுவது.
a) காவடியாட்டம் b) கரகாட்டம்
c) கோலாட்டம் d) கும்மி

59.பெயர்ச்சொற்களையும்,வினைச்சொற்களையும் எத்தனைப் பால்களாக பிரிக்கலாம்.
a) 5 b) 4 c) 6 d) 7

60. பொருந்தாதைக் கண்டறிக.
a) இன்கலை b) கவின்கலை
c) நற்கலை d) சிற்பகலை

61.தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் என்ற நூலை எழுதியவர் யார்?
a) இரா.பி.சேதுப்பிள்ளை b) உ.வே.சா
c) மயிலை சீனி.வேங்கடசாமி d) மருதகாசி

62.அழகுக்கலைகள் எத்தனை வகைப்படும்?
a) 4 d) 6 c) 8 d) 5

63.சரியான ஒன்றைக் கண்டறிக.
a) தமிழ்விருந்து - ரா.பி.சேதுப்பிள்ளை.
b) உழவர் ஏரடிக்கும்
சிறுகோலே அரசரது
செங்கோலை நடத்தும்
கோல் எனக்கூறியவர் - திருவள்ளுவர்.
c) உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் - பாரதிதாசன்.
d) முயற்சி திருவினையாக்கும் - சித்தர்கள்.

64.பிறமொழிச் சொல் என்பதனை எவ்வாறு எளிதாக அறியலாம்?
a) தனிக்குறிலை அடுத்து றகர ஒற்று [ற்] வரும்போது எளிதாக அறியலாம்.
b) தனிக்குறிலை அடுத்து டகர ஒற்று [ட்] வரும் போது எளிதாக அறியலாம்.



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

c) தனிக்குறிலை அடுத்து ரகர ஒற்று [ர்] வரும்போது எளிதாக அறியலாம்.
d) தனிக்குறிலை அடுத்து தகர ஒற்று [த்] வரும்போது எளிதாக அறியலாம்.

65.எதனோடு விளையாடக்கூடாது? யாரைப்பழிக்கக் கூடாது?
a) தீ, பெண்கள் b) பறவைகள், ஐம்பூதம்
c) ஐம்பூதம்,தீ d) பாம்பு , பெண்கள்

66. கடம் என்பதன் பொருள் யாது?
a) கசப்பான சொற்கள் b) உடம்பு
c) இருமாப்பு d)புகழ்ச்சியாகப் பேசுவது

67. பாம்பாட்டிச் சித்தர், குதம்வைச் சித்தர், அழுகிணிச் சித்தர் என்பன எல்லாமே.
a) இடுகுறிப்பெயர் b) பொதுப்பெயர்
c) காரணப்பெயர் d) சிறப்புப்பெயர்

68.செய்விளைக்கும் வாய்க்கால் அனையார் தொடர்பு என்ற பாடலடியை எழுதியவர் யார்?
a) விளம்பிநாகனார் b) கம்பர்
c) பாரதி d) சமணமுனிவர்

69.சாதி இரண்டொழிய வேறில்லை என்று கூறியவர் யார்?
a) ஔவையார் b) பாரதி
c) சித்தர்கள் d) வள்ளலார்

70. பாரதியாரின் காலம்
a) 12.11.1882 முதல் 09.11.1921
b) 11.12.1882 முதல் 09.11.1921
c) 12.11.1882 முதல் 12.09.1921
d)12.12.1881 முதல் 11.09.1922

71.பட்டாசு வெடிக்காத ஊர்
a) கூடங்குளம் b) கூந்தன்குளம்
c) கூத்தன்குளம் d) மேற்கண்ட எதுவுமில்லை

72. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
a) செங்காகம் b) பனங்காடை
c) மஞ்சள்சிட்டு d) அரிவாள் மூக்கன்

73.நம்நாட்டில் எத்தனை வகையான பறவைகள் வாழ்கின்றன?
a)2500 b)2300
c)2400 d)2450

74.கரைவெட்டி எந்த மாவட்டத்தில் உள்ளது?
a) அரியலூர் b) பெரம்பலூர்
c) கடலூர் d)தஞ்சாவூர்

75.மனிதர்களின் நல்ல நண்பன்.
a) பாம்பு b) பறவை
c) மண்புழு d) விலங்குகள்

76.சரியான தொடரைக் கண்டறிக.
a) பாம்பினம், மனிதன் தோன்றுவதற்கு 12 கோடி வருடங்களுக்கு முன்பே தோன்றியது.
b) நல்லபாம்பு 15 அடி நீளமுள்ளது. கூடுகட்டி வாழும் ஒரே பாம்பு
c) உலகில் 2750 வகை பாம்புகள் உள்ளன. இந்தியாவில் 244 வகை பாம்புகள் உள்ளன.
d) ராஜநாகத்தின் நஞ்சு கோப்ராக்சின் என்றும் வலிநீக்கி மருந்துசெய்யப் பயன்படுகிறது.

77. உழவர்களின் நண்பன்.
a) பாம்பு b) மண்புழு
c) பறவை d) நீர்

78. பகுத்தறிவாளர் சங்கத்தின் நோக்கம்.
a) பெண்களுக்கு கல்வி புகட்ட
b) மதுவை விலக்க
c) சாதி உயர்வுதாழ்வுகளையும் மத வேறுபாட்டையும் அகற்ற.
d) சுயமரியாதைக் காக்க

79. தவறானதைக் கண்டறிக.
a) பெரியாரின் இருகண்-மரியாதை, சுயமரியாதை
b) மக்கள் அனைவரும் மனிதச் சாதி என்றவர்-காந்தி
c) சாதி நீங்க, தீண்டாமை அகல எல்லாருக்கும் கல்வி தேவை எனக்கூறியவர்- பெரியார்,
d) பெண்களுக்கு நகை, அழகான உடை முக்கியம் இல்லை, அறிவும், சுயமரியாதையும் முக்கியம் என்றவர் பெரியார்.

80. பெரியாரைப் பற்றிய சரியான தொடரைத் தேர்வு செய்க.
a) 1977-ம் ஆண்டு நடுவணரசு அஞ்சல்தலை வெளியிட்டது.
b) யுனோஸ்கோ, பெரியாரின் சமுதாய சீர்திருத்தச் செயல்பாடுகளுக்காக 1971 ஆண்டு விருது தந்தது.
c) 21,400 மணிநேரம் உரையாற்றினார்.
d) 10,800 கூட்டங்களில் கலந்துகொண்டார்.

81) புலம் என்ற சொல்லின் பொருள் என்ன?
a) நிலம் b) ஊர்
c) நாடு d) நகரம்



AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com

82) சிறந்த ஊர்களைக் குறிக்கும் சொல் எது?
a) பட்டினம் b) ஊர்
c) பாக்கம் d) புரம்

83.தமிழ்நாட்டில் இக்காலத்தில் தலைசிறந்து விளங்கும் நகரம் எது?
a) மதுரை b) கோவை
c) சென்னை d) திருச்சி

84.ஆழ்வார்களில் சிறந்த ஆழ்வார் யார்?
a) ஆண்டாள் b) நம்மாழ்வார்
c) பெரியாழ்வார் d) திருமங்கை ஆழ்வார்

85.சரியானதை கண்டறிக?
a) மயிலாப்பூரில் உள்ள கபாலிச்சுரம் சிவாலயத்தை அப்பர் பாடியுள்ளார்
b) திருவல்லிக்கேணி திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றது
c) பாக்கம் கடற்கரை நகரங்கள்
d) குப்பம் - நெய்தல் நில வாழ்விடம்

86.தன்மை, முன்னிலை, படர்க்கை முறையே
a) எண் b) இடம்
c) சொல் d) பதம்

87.எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வழியே நிலனே என்றவர் யார்?
a) விளம்பி நாகனார் b) ஔவையார்
c) சமண முனிவர் d) கூடலூர் கிழார்

88.தன் எழுத்துகளுடன் மட்டும் சேரும் எழுத்துகள் யாவை? (உடனிலை மெய்ம்மயக்கம்)
a) ர்,ழ் b) க்,ச்,த்,ப்
c) ற், ன் d) மேற்கண்ட எதுவுமில்லை

89.மனைக்கு விளக்கம் மடவார், மடவார் தனக்கினிய தகைசால் புதல்வர் என்ற பாடல் எந்த நூலில் வருகிறது?
a) நாலடியார் b) புறநானூறு
c) நான்மணிக்கடிகை d) குறவஞ்சி

90. நாட்டுபுறப் பாடல்களை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?
a) 6 b) 5 c) 8 d) 7

91.கொழும்பில் கூடாரம் போட்டவர் என்ன வியாபாரம் செய்தார்?
a) கொழுசு b) மல்லிகை
c) மாலை d) கொத்தமல்லி

92.வீரச்சிறுவன் கதை எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டது?
a) அறிவை வளர்க்கும் அற்புத கதைகள்
b) லிட்டில் பிங்கர்ஸ்
c) நாட்டுபுறக்கதை
d) மேற்கண்ட எதுவுமில்லை

93.கடலில் நான் ஒரு முத்தென்று நீ காட்டு. உந்தன் தலை தூக்கு இந்தப்பாடல் வரிகள் எந்தத் தலைப்பின் கீழ் வருகிறது?
a) பாரத தேசம்
b) செய்யும் தொழிலே தெய்வம்
c) திண்ணையை இடித்துத் தெருவாக்கு
d) மருதகாசி எழுதியது

94. புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு நூல்களை எழுதியவர் யார்?
a) திரு.வி.க
b) கண்ணதாசன்
c) மருதகாசி
d) தாராபாரதி

95. சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுப்படுத்துவது பெருங்கொடுமை என்று கூறியவர் யார்?
a) அம்பேத்கார்
b) முத்துராமலிங்கர்
c) பெரியார்
d) மு.வ

96. மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள், என குறிப்பிட்டவர் யார்?
a) வள்ளலார்
b) திருமூலர்
c) தாயுமானவர்
d) முத்து ராமலிங்கர்

97. சரியானதை கண்டறிக
a) அ,இ,உ என்பன சுட்டெழுத்துகள்
b) உதுக்காண் என்றால் முதுகுப் பக்கம் என்பது பொருள்
c) உப்பக்கம் என்றால் சற்றுத் தொலைவில் பார் என்பது பொருள்
d) உம்பர் என்றால் கீழே என்பது பொருள்

98.சொல்லுக்கு அழுத்தம் தரும் எழுத்து/ சொல் எது?

a) ஏ, எ b) ஏ, தான்
c) ஏ,ஆ d) யா, ஆ

99.வான்வழியே நினைத்த இடத்துக்கு செல்லும் சித்தர்கள்
a) கமன சித்தர்
b) வான் கவி
c) மின்னார்
d) காயசித்தி

100.தவறானதைக் கண்டறி
a) அழகிய சொக்கநாதப் புலவர் தச்சநல்லூரில் பிறந்தவர்
b) ஏ என்பது சொல்லின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப் பொருளைத் தரும்
c) திருக்குற்றாலக்குறவஞ்சியின் ஆசிரியர் திரிகூட ராசப்பக்கவிராயர்
d) அழகிய சொக்கநாதப் புலவர் 18ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்


AB101, 2nd Floor, P.K.S Complex, 6th Main Road, Behind KHM Hospital, Anna Nagar, Chennai - 40.
Ph : 044 - 26203883, Cell : 70927 29797 www.indianiasacademy.com